Publication : Maalai Sudar

Region : Chennai

Date : Dec 09, 2010

## அப்துல் கலாம் பங்கேற்பு

# 'ஸ்கூல் ஆப் டுமாரோ' கல்வி கருத்தரங்கம்




சென்னை, டிச.8:

கல்வியில் ஆரோக்கிய மாற்றத்திற்காக 'ஸ்கூல் ஆப் டுமாரோ' சார்பில் 4 நகரங்களில் கல்வி கருத்தரங்கம் நடைபெற்றது.

எக்ஸீட் வருடாந்திர பன்னாட்டு கருத்தரங்கமான 'டிஸ்கவரி ஸ்கூல் ஆப் டுமாரோ' 2-வது எடிஷன் டெல்லி, மும்பை, ஐதராபாத் மற்றும் சென்னை என 4 பெருநகரங்களில் ஒரே நேரத்தில் கல்வி கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் சிந்தனையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் கலந்து கொண்டு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தனர். இந்த கருத்தரங்கு இணையதளம் மற்றும் வீடியோ கான்பரன்சிங் தொழில்நுட்பத்தின் மூலம் நடைபெற்றது. இந்திய பள்ளிக் கல்வி மேம்பாட்டுக்காக நடைபெற்ற இக்கருத்தரங்கை முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் தொடங்கி வைத்தார். மேலும் எம்.ஐ.டி. பேராசிரியர் பீட்டர் செங்கே, ஹார்வர்டு பல்கலைக்கழக பேராசிரியர் டேவிட் பெர்கின்ஸ் மற்றும் ப்ராக்டர் அண்ட் கேம்பிள் இந்தியா நிறுவனத்தின் முன்னாள் சிஇஓ குருசரண் தாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை எடுத்துரைத்தனர். சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய டிஸ்கவரி எஜிகேஷன் தலைமை செயல் அதிகாரி ராம்கோபால் வல்லத், பள்ளிக் கல்வியில் இக்கருத்தரங்கு முக்கிய பங்கு வகிக்கும் வகையில் அமைந்ததாக தெரிவித்தார்.